வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் மலர்விழி

தேதி 8.6.2023 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------

தலைப்புச் செய்திகள்

ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்குவதில் அரசின் உறுதிப்பாடு காரணமாகவே, சுகாதாரத் துறையில் பல முக்கிய முன்னேற்றங்கள் எட்டப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

ரிசர்வ் வங்கி இன்று வெளியிட்டுள்ள பணக் கொள்கை அறிக்கையில், முக்கிய வட்டி விகிதங்கள் மாற்றப்படவில்லை.

நாடு முழுவதிலும் உள்ள சுமார் 1 லட்சம் **தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்**, பிரதமரின் **கிசான் சம்ரித்தி** கேந்திரங்களின் கீழ் கொண்டு வரப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி, இன்று மங்கலம் மற்றும் வில்லியனூர் தொகுதிகளில், பொதுப் பணித் துறை மூலமான பல்வேறு திட்டங்கள் மற்றும் பணிகளை தொடக்கி வைத்தார்.

மோடிஆரோக்கியம்

ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்குவதில் அரசின் திடமான உறுதிப்பாடு காரணமாகவே, நாட்டின் சுகாதாரத் துறையில் பல முக்கிய முன்னேற்றங்கள் எட்டப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். உடல் நலத்தை நோக்கிய இந்தியாவின் பயணத்தில் எவரும் விடுபட்டுப் போவதை அனைவரும் ஒருங்கிணைந்து தவிர்ப்போம் என்று டுவிட்டரில் அவர் கூறி உள்ளார். சுகாதாரத் துறையில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக, கட்டுரைகள், படங்கள் வீடியோக்கள் மற்றும் பல படங்களையும், பிரதமர் பகிர்ந்து கொண்டுள்ளார். பிரதமர் திரு நரேந்திர மோடி, வரும் 21 முதல் 24-ஆம் தேதி வரை, அமெரிக்காவிற்கு பயணம் மேற்கொள்கிறார். இந்தியாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையிலான உறவுகளை, உலக அளவிலான அமெரிக்காவின் மிக முக்கிய இருதரப்பு

உறவாக இப்பயணம் மேம்படுத்தும் என்று, இந்தோ-பசிபிக் பிராந்தியத்திற்கான, அமெரிக்க அதிபரின் உயர்நிலை அதிகாரி திரு **குர்த் கேம்ப் பெல்** கூறி உள்ளார். இருநாடுகளுக்கும் இடையே, 10 ஆண்டுகளுக்கு முன்னர் இல்லாத அளவில் தற்போது நம்பிக்கை மேம்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். முதலீடுகள் மற்றும் மக்கள் நிலையிலான தொடர்புகளில், புதிய கதவுகளை திறப்பதாக, பிரதமர் திரு நரேந்திர மோடியின் அமெரிக்க பயணம் அமையும் என்றும் திரு கேம்ப் பெல் கூறினார். உயர் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியா வகித்து வரும் முக்கிய பாத்திரத்தை உலகமே அங்கீகரிப்பதாகவும், இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவுகள் **தந்திரோபாய** நோக்கங்களுக்கு அப்பாற்பட்டவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

*மோடி-அமெரிக்கா*

பிரதமர் திரு நரேந்திர மோடி, தமது அமெரிக்க பயணத்தின் போது, அமெரிக்க நாடாளுமன்றத்தின் கலப்புக் கூட்டத்தில் உரையாற்ற இருப்பதும், அமெரிக்க நாடாளுமன்றத்தில் 2-ஆவது முறையாக உரையாற்றும் முதலாவது இந்திய பிரதமர் திரு நரேந்திர மோடி தான் என்பதும் குறிப்பிடத் தக்கது.

*ரிசர்வ்வங்கி*

ரிசர்வ் வங்கி இன்று வெளியிட்டுள்ள பணக் கொள்கை அறிக்கையில், ரெப்போ வட்டி விகிதம் மாற்றப்படாமல். ஏற்கனவே உள்ள அதே அளவில் 6.5 சதவிகிதமாக மீண்டும் அறிவிக்கப் பட்டுள்ளது. ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சக்தி காந்த தாஸ் இன்று மும்பையில், பணக் கொள்கை குழுவின் கூட்டத்திற்கு பின்னர், செய்தியாளர்களிடம் இதை அறிவித்தார். நடப்பு நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி பற்றிய ரிசர்வ் வங்கியின் மதிப்பீடும், 6.5 சதவிகிதமாகவே நீடிப்பதாக அவர் தெரிவித்தார். நாட்டில் நுகர்வோர் விலை குறியீட்டு எண் அடிப்படையிலான பணவீக்கம் குறைந்து வருகின்ற போதிலும், ஒட்டு மொத்த பணவீக்கம் இலக்கை விட அதிகமாகவே இருப்பதால், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் அதேவேளை, வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கும் வகையில், பணபுழக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் தொடர்ந்து கவனம் செலுத்த, பெரும்பான்மை அடிப்படையில், பணக்கொள்கை குழுவினர் முடிவு செய்திருப்பதாக அவர் கூறினார். பணக் கொள்கை குழுவின் மதிப்பீடுகளின் படி, நடப்பு நிதியாண்டு முழுவதும் பணவீக்கம் 4 சதவிகிதத்திற்கு அதிகமான அளவில் நீடிக்கும் என்றும், பருவமழை இயல்பாக அமையும் என எடுத்துக்

கொண்டு, இதர எல்லா அம்சங்களையும் கருத்தில் கொண்டு பார்க்கையில், ஒட்டு மொத்த பணவீக்கம் 5.1 சதவிகிதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

*சக்திகாந்ததாஸ்*

நாட்டில், மொத்தமாக புழக்கத்தில் இருந்த 3.62 லட்சம் கோடி இரண்டாயிரம் ரூபாய் நோட்டுக்களில், மக்கள் இதுவரை 50 சதவிகித நோட்டுக்களை, வங்கிகளில் டெபாசிட் அல்லது பரிமாற்றம் செய்து கொண்டுள்ளதாக, ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சக்தி காந்த தாஸ் தெரிவித்துள்ளார். 2 ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை மாற்றிக் கொள்ளவும், டெபாசிட் செய்யவும், வங்கிகளில் அதிகக் கூட்டம் இருக்கவில்லை என்று, அவர் இன்று மும்பையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். பொது மக்கள், கடைசி நாள் வரை காத்திராமல் 2 ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை முன்கூட்டியே மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

கேள்வி ஒன்றுக்கு அவர் பதில் அளிக்கையில் வெளிநாடு வாழ் இந்தியர்கள் அல்லது வெளிநாடு சென்றுள்ள இந்தியர்களும் 2 ஆயிரம் ரூபாய் நோட்டு வைத்திருப்பதை ரிசர்வ் வங்கி அறியும் என்றும், அதற்கேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார். அதேசமயம், புதிய மதிப்புகளில் ரூபாய் நோட்டுகள் வெளியிடப்பட மாட்டாது என்றும் அவர் தெளிவு படுத்தினார்.

ரிசர்வ் வங்கி துணை ஆளுநர் திரு ரபி சங்கர், இந்த செய்தியாளர் கூட்டத்தில் பேசுகையில், CBDC என்னும் டிஜிட்டல் நாணயங்கள், இம்மாத இறுதிக்குள், 10 லட்சம் வாடிக்கையாளர்கள் மூலம், முன்னோடி திட்டமாக பரிசோதிக்கப்படும் என்றார். பொதுப் பயன்பாட்டிற்கான டிஜிட்டல் நாணயங்களின் வெளியீட்டிற்கு, குறிப்பிட்ட தேதி எதுவும் நிர்ணயிக்கப் படவில்லை என்று, அவர் மேலும் தெரிவித்தார்.

*ஸ்டாலின்*

தமிழகம், அனைத்து துறைகளிலும் முன்னணி மாநிலமாக திகழ்வதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கூறி உள்ளார். காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மூலம், 22 தொழிற்பயிற்சி நிலையங்களில், மொத்தம் 762 கோடி ரூபாய் செலவில் 4-ஆம் கட்டமாக அமைக்கப்பட்டுள்ள, தொழில்நுட்ப மையங்களை இன்று அவர் திறந்து வைத்துப் பேசினார். தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான மனித

வளம் தமிழகத்தில் உள்ளதாகவும், மின்சார உற்பத்தியில் தமிழகம் பெரிய அளவில் வளர்ச்சிக் கண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

*வேளாண்மை*

நாடு முழுவதிலும் உள்ள சுமார் 1 லட்சம் **தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்**, பிரதமரின் **கிசான் சம்ரித்தி** கேந்திரங்களின் கீழ் கொண்டு வரப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களை, இயற்கை உரங்களுக்கான விற்பனைக் கேந்திரமாக செயல்படுத்த இதனால் ஏதுவாகும். மத்திய கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித் ஷா, ரசாயன மற்றும் உரத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா ஆகியோருக்கு இடையே, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளை வான் வழியே வயல்களில் தெளிப்பதற்கான, டிரோன் தொழில் முனைவோராகவும், தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களை செயல்படுத்த முடியம் என இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. **கூட்டுறவு மூலமான வளர்ச்சி** என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையை நிறைவேற்றும் வகையிலான, இத்தகைய நடவடிக்கைகளால் கூட்டுறவு கடன் சங்கங்களின் வருவாய் அதிகரிப்பதுடன், கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு மேம்படும் என்பதும் குறிப்பிடத் தக்கது.

*ரங்கசாமி-மங்கலம்*

புதுச்சேரியில் மங்கலம் தொகுதிக்கு உட்பட்ட மேல்சாத்தமங்கலம் கிராமத்தில், குடுவையாற்றின் குறுக்கே, 2 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், புதிய தடுப்பணை கட்டும் பணிகளை, இன்று, முதலமைச்சர் திரு ரங்கசாமி, அடிக்கல் நாட்டித் தொடக்கி வைத்தார். முன்னதாக, உறுவையாறு அன்பு நகரில், 151 லட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள, மேல்நிலை நீர் தேக்க தொட்டியுடன் கூடிய, மேம்படுத்தப்பட்ட குடிநீர் விநியோக திட்டத்தையும், முதலமைச்சர் தொடக்கி வைத்தார். இத்திட்டத்தினால், அன்பு நகர். மூகாம்பிகை நகர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம் பேர் பயன் பெறுவார்கள்.

திருக்காஞ்சி கிராமத்தில், ஜல் ஜீவன் திட்ட நிதி உதவியுடன் சுமார் 219 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மேல்நிலை நீர் தேக்க தொட்டியுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட குடிநீர் திட்டம் அமைக்கும் பணிகளுக்கும் முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று அடிக்கல் நாட்டினார். இத்திட்டத்தினால் திருக்காஞ்சி, ஆண்டியார் பாளையம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த சுமார் 6 ஆயிரம் பேர்

பயன் பெறுவார்கள். பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் தலைமையில், வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார் முன்னிலையில் இன்று இதுதொடர்பாக நடைபெற்ற இந்நிகழ்ச்சிகளில், பொதுப் பணித் துறை செயலர் திரு மணிகண்டன், தலைமை பொறியாளர் திரு சத்தியமூர்த்தி உள்ளிட்ட அதிகாரிகளும், கிராம பொது மக்களும் கலந்து கொண்டனர். புதுச்சேரியில் கிராம மக்கள் தொகை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 70 லிட்டர் அளிவிற்கு குறையாமல், தரமான குடிநீர் வழங்குவதற்கான திட்டங்களை அரசு அமல்படுத்தி வருவதும் குறிப்பிடத் தக்கது.

*ரங்கசாமி-சாலை*

புதுச்சேரி வில்லியனூர் தொகுதியில் மொத்தம் சுமார் 18 கிலோமீட்டர் நிளமுள்ள பல்வேறு சாலைகளை சீரமைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக, வில்லியனுரில் 4 மாட வீதிகளை, 1.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகளை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று பூமி பூஜை செய்து தொடக்கி வைத்தார். பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் தலைமையில், தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், எதிர்கட்சி தலைவருமான திரு ஆர் சிவா முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், பொது பணித் துறை தலைமை பொறியாளர் திரு சத்தியமூர்த்தி உள்ளிட்ட அதிகாரிகளும், ஊர் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

*காவலர்பணி*

புதுச்சேரியில், எழுத்து தேர்வு மற்றும் உடல் தகுதி தேர்வு மூலம், 253 காவலர் பணியிடங்களுக்கு, தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களின் பெயர்ப் பட்டியலை,காவல் துறை, பிரிவு வாரியாக இன்று வெளியிட்டுள்ளது. 33 சதவிகித இடஒதுக்கீடு அடிப்படையில் காவலர் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களின் பெயர்ப் பட்டியலும் இதில் அடங்கும். காவலர் பணிக்கு தேர்ந்தெடுக்கப் பட்டவர்களின் சான்றிதழ்களை சரிபார்க்கும் பணிகளுக்கான கால அட்டவணை, பின்னர் வெளியிடப்படும் என்றும் காவல் துறை தெரிவித்துள்ளது. இப்பட்டியல்களுடன் சேர்த்து, காவலர் பணிக்கான **காத்திருப்போர் பட்டியல்**களும், பிரிவு வாரியாக இன்று வெளியிடப்பட்டுள்ளன.

பருவமழை

தென்மேற்கு பருவமழை கேரளத்தில் இன்று தொடங்கி உள்ளது. வழக்கமான ஜூன் 1-ஆம் தேதிக்கு பதிலாக இவ்வாண்டு ஒரு வாரக் காலம் தாமதமாக பருவமழை தொடங்கி இருப்பதாக, இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது. தென் மேற்கு பருவ மழை, அடுத்த 48 மணி நேரத்தில் மத்திய அரபிக் கடல், தமிழ்நாடு மற்றும் கர்நாடகப் பகுதிகளுக்கும், தென்மேற்கு, வடகிழக்கு மற்றும் மத்திய வங்க கடல் பகுதிகளுக்கும் முன்னேற சாதகமான சூழல் காணப்படுவதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, கிழக்கு மத்திய அரபிக் கடலில் உருவான, அதிதீவிர பிபர்ஜாய் புயல், கடந்த 24 மணி நேரத்தில், மணிக்கு 5 கிலோ மீட்டர் வேகத்தில் வடக்கு திசையில் நகர்ந்துள்ளது. அடுத்த 24 மணி நேரத்தில் இது படிப்படியாக மேலும் தீவிரம் அடைந்து, அடுத்த 3 நாட்களில், கிட்டதட்ட வடக்கு-வடமேற்கு திசையில் நகரக் கூடும் என்றும், வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது.

கடல்

உலக பெருங்கடல் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. இந்நாளை ஒட்டி, கடல் வளப் பாதுகாப்பு மற்றும் கடல் மாசுபாடுகளை தடுப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஏவுகணை

**பாதுகாப்பு ஆராய்ச்சி** மற்றும் அபிவிருத்திக் கழக விஞ்ஞானிகள், **அக்னி பிரைம்** என்னும், இந்தியாவின் புதிய தலைமுறை ஏவுகணையை, வெற்றிகரமாக ஏவிப் பரிசோதித்து உள்ளனர். ஒடிசா கடற்கரைக்கு அப்பால், டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் தீவில் இருந்து, இப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பரிசோதனையை வெற்றிகரமாக நடத்திய விஞ்ஞானிகளுக்கு, பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார். **அக்னி பிரைம்** ஏவுகணையை, பாதுகாப்புப் படையில் சேர்த்துக் கொள்ள, இப்பரிசோதனை வழிகோலி இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்குவதில் அரசின் உறுதிப்பாடு காரணமாகவே, சுகாதாரத் துறையில் பல முக்கிய முன்னேற்றங்கள் எட்டப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

ரிசர்வ் வங்கி இன்று வெளியிட்டுள்ள பணக் கொள்கை அறிக்கையில், முக்கிய வட்டி விகிதங்கள் மாற்றப்படவில்லை.

நாடு முழுவதிலும் உள்ள சுமார் 1 லட்சம் **தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்**, பிரதமரின் **கிசான் சம்ரித்தி** கேந்திரங்களின் கீழ் கொண்டு வரப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி, இன்று மங்கலம் மற்றும் வில்லியனூர் தொகுதிகளில், பொதுப் பணித் துறை மூலமான பல்வேறு திட்டங்கள் மற்றும் பணிகளை தொடக்கி வைத்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-----------------------------------